## தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம் – 2015

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,987,857 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,077,829 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,065,686 தொகையான அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

(அ) தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினை தாபித்ததன் பிரதான நோக்கம் யுத்த சூழ்நிலைகள் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களினால் தமது பெற்றோரையோ பாதுகாவலர்களையோ இழந்த பிள்ளைகள் உட்பட பொருளாதர பிரச்சினைகளால் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் தேர்ச்சிகள் மற்றும் ஏனைய திறமைகள் என்பவற்றை அதிகரித்துக் கொள்ள முடியாத இலங்கை குழந்தைகளுக்கு நிதி உதவிகள் வழங்குவதாகும். நிதியத்தைப் பயன்படுத்தி உத்தேச நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் பயனுள்ளதாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே 2014 சனவரி 02 ஆந் திகதிய பீடீ/என்ஜ120/2/07/02-சீஎம் ஆம் இலக்க அமைச்சரவை திருத்தத்தில் நிதியமைச்சரின் பரிந்துரையாக இருந்தது. முன்னைய ஆண்டின் போது சிறுவர்களுக்கு உதவிக் கொடுப்பனவாக ரூபா 1,935,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் கொடி விற்பனை மூலமும் நிலையான வைப்புக்கள் முதலீடுகள் மூலமும் கிடைத்த வருமானம் ரூபா 1,991,001 ஆக இருந்த போதிலும், அதிலிருந்து எந்தவொரு சிறுவருக்கும் உதவுதொகை கொடுப்பனவும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நிதியத்தைக் நிர்வகித்தல், அனைத்து அமைச்சு மேற்பார்வை குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒருமுறை

அக்குழு கூட்டப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் ஒரு தடவையேனும் கூட்டப்படாதிருந்தமை காரணமாக நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினை கட்டியெழுப்புவதற்காக நிதியங்களை ஏற்படுத்தும் மார்க்கங்களாக தனியார்துறை நிறுவனங்களிலிருந்தும், செல்வந்தர்களிடமிருந்தும், அரச வங்கிகள், லொத்தர் சபை, ஊழியர் சேமலாப நம்பிக்கை பொறுப்பு நிதியம் போன்ற நிறுவனங்களிடமிருந்தும், இந்நாட்டில் பதிவு செய்துள்ள அரச சார்பற்ற வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு செல்வந்தர்களிடமிருந்தும் நிதியைத் திரட்டுவதற்கும் இயலுமை காணப்பட்ட போதிலும், சிறுவர் தினத்திற்காக விநியோகிக்கப்பட்ட கொடி வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் தவிர ஏனைய வருமான மார்க்கங்களிலிருந்து நிதியைச் சேகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு நிலைமையின் கீழ் நிதி முதலீடு நடவடிக்கைகளை செயற்படுத்தியமை தவிர மீளாய்வாண்டின் போது நோக்கத்திற்குட்பட்ட இலக்குகளை நிறைவேற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஈ) நிதியத்தின் பிரதான வருமான மார்க்கம் சிறுவர் தினக் கொடி விற்பனை வருமானமாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் சிறுவர் தினத்திற்காக 400,000 அச்சிடப்பட்ட கொடிகள் அனுப்பப்பட்ட 342 பிரதேச செயலகங்களில் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 635,675 கூட்டுத்தொகையான பணத்தை 103 பிரதேச செயலகங்கள் மாத்திரமே அனுப்பியிருந்தன. 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 72 செயலகங்களிலிருந்து பணம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், நிதி சேகரிப்பதற்காக முறையான நடைமுறையொன்றும் நலனாளி சிறுவர்களுக்காக தொடர்ச்சியாக உதவித்தொகை வழங்கும் நடைமுறையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் விடயப்பரப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அமைச்சுச் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பேரேடுகளைப் பராமரித்தல் மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்தல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.